மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட மசோதாக்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் நாளன்று பரிந்துரை எதுமின்றி மேலவையில் நிறைவேற்றப்பட்டதென்று செய்தி வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்:—

1. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 1/69).

2. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 2/69).

3. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 6/69).

4. தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண். 7/69).

மேலும், தமிழ்நாடு, 1969-ம் ஆண்டு, பஞ்சாயத்துக்கள் (திருத்த)—மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 5/69), திருத்தம் எதுமின்றி 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 3-ம் நாளன்று மேலவையில் நிறைவேற்றப்பட்டதென்றும் செய்தி வந்துள்ளதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்

(அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, Sir, I move—

'That, with reference to Rule 183 of the Tamil Nadu Legislative Assembly Rules, this Assembly do proceed, on a date to be fixed by the Hon. the Speaker, to elect twelve members to be members of the Committee of Privileges for the financial year 1969–70.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (Committee of Privileges) 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள் களை 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12-ம் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக் குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ம் தேதி சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பன்னிரெண்டு மேற்படுமாயின் 1969-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 17-ம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.